042

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

கல்வி முதுமாணி பட்டப்படிப்பு- 2023/2024

இறுதிப்பரீட்சை – 2023/2024

**STP9617- ஆசிரியர் கல்வி**

காலம்: மூன்று (03) மணித்தியாலங்கள்

---

**திகதி:- 21.08.2024** நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30

---

ஏதேனும் நான்கு (04) வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. **i.** ஆசிரியர்களுக்கான சேவை முன் பயிற்சிக்கும், சேவைக்கால பயிற்சிக்கும் இடையிலான ஐந்து (05) வேறுபாடுகளைக் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

**ii.** தரமான வாண்மைத்துவ விருத்திக்கு ஆசிரியர்கள், ஆசிரிய தேர்ச்சிகளை வளர்த்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தினை உதாரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

**iii.** ஆசிரியர்களிடம் காணப்பட வேண்டிய ஐந்து (05) கற்பித்தல் திறன்களை குறிப்பிட்டு, அவற்றை எவ்வாறு விருத்திசெய்யலாம் என்பதை கலந்துரையாடுக.

(10 புள்ளிகள்)

2. **i.** வாண்மைத்துவம் என்பதைச் சுருக்கமாக விளக்குக.

(05 புள்ளிகள்)

**ii.** இலங்கையில் ஆசிரிய வாண்மைத்துவம் ஒரு தொழில் வாண்மைத்துவமாக கருதப்படுகின்றதா? பொருத்தமான காரணங்களுடன் விளக்குக.

(10 புள்ளிகள்)

**iii.** இலங்கையின் ஆசிரிய தொழில்வாண்மையினை உயர்த்துவதற்கு எடுக்க வேண்டிய படிமுறைகளை ஆராய்க.

(10 புள்ளிகள்)

3. **i.** ஆசிரியர்களுக்கான ஒழுக்க நெறிக்கோவை ஏன் அவசியம் என்பதை ஐந்து (05) காரணங்களுடன் குறிப்பிடுக.

(05 புள்ளிகள்)

**ii.** இலங்கையில் ஆசிரியர்களுக்காக அறிமுகப்படுத்தப்பட்ட ஒழுக்க நெறிமுறையை மதிப்பீடு செய்க.

(10 புள்ளிகள்)

**iii.** ஆசிரியர்களின் தொடர்ச்சியான தொழில் வாண்மைத்துவ விருத்திக்காக ஆசிரிய தொழில் மேம்பாட்டு மையங்களால் வழங்கப்படும் ஆசிரிய பயிற்சித்திட்டங்களை விமர்சன ரீதியாக விளக்குக.

(10 புள்ளிகள்)

4. **i.** ஆசிரியர் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களால் அடையப்பெற வேண்டிய **ஐந்து** (05) நோக்கங்களைச் சுருக்கமாக விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**ii.** இலங்கையில் பட்டமேற்கல்வி டிப்ளோமா நிகழ்ச்சித்திட்டத்தில் இந்த நோக்கங்கள் எந்தளவிற்கு அடையப்பட்டுள்ளது என்பதை ஆராய்க.

**(10 புள்ளிகள்)**

**iii.** பாடசாலை மாணவர்களிடையே விழுமியத்தினை மேம்படுத்த ஆசிரியர்களால் மேற்கொள்ளக் கூடிய **ஐந்து** (05) வழிமுறைகளை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

5. **i.** ஆசிரியர் வலுவூட்டல் என்றால் என்ன என்பதை சுருக்கமாக விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**ii.** இலங்கையில் ஆசிரிய வலுவூட்டலுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறைகளை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

**iii.** ஆசிரியர் வலுவூட்டலில் முகங்கொடுக்க வேண்டிய **ஐந்து** (05) சவால்களைக் குறிப்பிட்டு, அவற்றை தவிர்த்துக் கொள்வதற்கு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

6. **i.** இலங்கையில் ஆசிரியர் ஆட்சேர்ப்பு கொள்கையினை சுருக்கமாக விளக்குக.

**(05 புள்ளிகள்)**

**ii.** இலங்கையில் ஆசிரியர்களுக்கான பதவி உயர்வு நடைமுறையினை பரீட்சிக்குக.

**(10 புள்ளிகள்)**

**iii.** பாடசாலை மட்ட ஆசிரியர் அபிவிருத்தி (SBTD) நிகழ்ச்சித்திட்டத்தினை செயற்படுத்துவதில் அதிபர்கள் எதிர்கொள்ளும் சவால்களை இனங்காண்க.

**(10 புள்ளிகள்)**

- முழுப்பதிப்புரிமையுடையது -